செய்தி வெளியீடு எண்: 422 நாள்: 29.02.2024

**செய்தி வெளியீடு**

## 15 மகளிர் Start Up நிறுவனங்களுக்கும், 15 தொழில் வளர் காப்பகங்களுக்கும் ரூ. 89.70 லட்சம் நிதி உதவியை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்

------

Start up TN நிறுவனத்தில் சென்னையில் இன்று (29.2.2024)நடைபெற்ற நிகழ்ச்சியில் 15 மகளிர் Start Up நிறுவனங்களுக்கும், 15 தொழில் வளர் காப்பகங்களுக்கும் ரூ.89.70 லட்சம் நிதி உதவியை வழங்கி மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

"மாநில அரசின் நிதி உதவியுடன் இயங்கி வரும் தொழில் வளர்காப்பங்களை மகளிர் Start Up நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அதற்கான உறுப்பினர் கட்டணம் ஓர் ஆண்டிற்கான வாடகைக் கட்டணம் அரசே ஏற்கும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, இந்த விழாவில் 15 மகளிர் Start Up நிறுவனங்கள் தொழில் வளர்காப்பகங்களை பயன்படுத்திக் கொள்ள செலுத்த வேண்டிய கட்டணத் தொகை ரூ.14 லட்சத்து 70 ஆயிரம் நிதி உதவியாக அளிக்கப்படுகிறது. தொழில் வளர்காப்பகங்களை மேம்படுத்தும் நோக்கில் சிறப்பாக செயல்படும் தொழில் வளர்காப்பகங்களை தேர்ந்தெடுத்து அவற்றிக்கு ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசு நிதி உதவி அளித்து வருகிறது. இந்த திட்டத்தன் கீழ் நடப்பாண்டு 15 தொழில் வளர்காப்பகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றிக்கு தலா ரூ. 5 லட்சம் வீதம் ரூ. 75 லட்சம் நிதி உதவி இன்று வழங்கப்படுகிறது. மனித வள மேலாண்மை, நிதி, சட்ட ஆலோசனைதகவல் தொழில்நுட்பம், ஊடகம்-விளம்பரம் சார்ந்த சேவைகளைபுத்தொழில் நிறுவனங்கள் சலுகை விலையில் பெற ஸ்மார்ட் கார்டு திட்டம் இந்த மாதம் 7-ஆம் தேதி துவங்கி வைக்கப்பட்டது. இந்த சேவைகளை தொழில் வளர்காப்பகங்களும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இன்று இந்த விழாவில் 52 தொழில் வளர்காப்பகங்களுக்கு ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் 2021-மார்ச் வரை சுமார் 2,300 Start up நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய முயற்சியால் தற்போது இந்த எண்ணிக்கை 7,600 க்கும் மேல் உயர்ந்துள்ளது. இதில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்களில் பெண்கள் நிறுவனர்களாக உள்ளனர் என்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

கழக அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் Start-Up நிறுவனங்களை உருவாக்க, புத்தொழில் முனைவோர்களுக்கு ஆதார நிதி வழங்கும் (TANSEED) திட்டத்தின் கீழ் 2021-2022 முதல் இதுவரை 132 Start-Up நிறுவனங்களுக்கு, ரூ.13 கோடியே 95 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. சமுதாயத்தின் அனைத்து பிரிவுகளில் இருந்தும், தொழில்முனைவோர்கள் உருவாக வேண்டும் என்ற நல்ல நோக்கில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் **2022-2023** நிதி ஆண்டில் SC/ ST Start-Up நிறுவனங்களுக்கு,ரூ. 30 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்தார்கள். இந்த நிதி, நடப்பு ஆண்டு, 2023-2024 ல், ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.இதுவரை, 30 SC/ST தொழில் முனைவோர்க்கு ரூ.43 கோடியே 65 லட்சம் நிதி உதவியை பங்கு முதலீடாக அரசு வழங்கியுள்ளது. ஆக மொத்தம், கழக அரசு பொறுப்பேற்று இதுவரை 162 Start-Up நிறுவனங்களுக்கு, ரூ.57 கோடியே 60 லட்சம் கழக அரசு நிதியுதவி வழங்கியுள்ளது என பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரு நகரங்களில் மட்டும் இல்லாமல், தமிழ்நாடு முழுவதும் Start Up நிறுவனங்களை வளர்த்தெடுக்கவும், அவர்களுக்கு உரிய ஆலோசனைகள் உதவிகள் வழங்கவும், 2022-23 ஆம் ஆண்டு மதுரை, ஈரோடு, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வட்டார புத்தொழில் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டு 2023-24ல் சேலம், ஓசூர், கடலூர் தஞ்சாவூர் ஆகிய

மாவட்டங்களில் புத்தொழில் மையங்கள் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மாணவர்கள்–இளைஞர்கள் படிக்கும் காலத்திலேயே தொழில் முனைவோர்களாக உருவாக பள்ளி–கல்லூரிகளில் தொழில் முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம், பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் ஆட்சி பொறுப்பேற்று, இது வரை 8 லட்சத்து 98 ஆயிரத்து 812 இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன். கடந்த 2 1/2 ஆண்டுகளில், 266 புதிய கண்டுப்பிடிப்பாளர்களுக்கு ரூ.7 கோடியே 39 லட்சம் நிதி உதவி வழங்கி ஊக்கப்படுத்தி உள்ளது.

மேலும், கல்லூரி மாணவர்களை இளம் தொழில்முனைவோர்களாக வளர்த்தெடுக்க 105 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் தொழில் வளர் காப்பகங்கள்– Incubation Centres அமைக்கப்பட்டு உள்ளது. தொழில் வளர் காப்பகங்களுக்கு இன்று வழங்கப்பட்ட நிதி உதவியுடன் சேர்த்து 44 இன்குபேஷன் சென்ட்டர்களுக்கு ரூ.20 கோடியே 59 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. அரசின் இன்குபேஷன் சென்ட்டர்களை பயன்படுத்தி 89 மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் புதிய கண்டுபிடிப்புகளை தயாரித்து பலன் அடைந்துள்ளனர்.

இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களால் Start up தர வரிசைப் பட்டியலில் இந்திய அளவில் கடைசி தர வரிசையில் இருந்த தமிழ்நாடு–கழக அரசு பொறுப்பேற்ற பின் கடைசி இடத்தில் இருந்து முன்னேறி 2021–ல் 3–ஆம் இடமான–லீடர் விருதினை பெற்றது தற்போது, ஒன்றிய அரசு வெளியிட்ட 2022–ஆம் ஆண்டிற்கான தர வரிசை பட்டியலில்–Start up–TN நிறுவனம் இந்திய அளவில் முதல் இடம் பிடித்து சிறந்த செயற்பாட்டாளர் என்ற விருதினை பெற்றுள்ளது. மாண்புமிகு முதல்வரின் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் இலக்கினை அடைவதற்கு தொழில் துறை, MSME துறையுடன், Start Up நிறுவனங்களும் இணைந்து செயலாற்றிட வேண்டும்" என தெரிவித்தார்.

இந்த விழாவில், **Start Up-TN Catalyst** வலைத்தளத்தை துவக்கி வைத்தும். Start Up நிறுவனங்களை தரவரிசைப்படுத்தும் TNIMM அறிக்கையையும் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் வெளியீட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் அரசு செயலர் அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப, தலைமைச் செயல் அலுவலர் சிவராஜா ராமநாதன், Start –Up நிறுவனத்தின் AVP தினேஷ் குமார், நிதி உதவி பெறும் தொழில் வளர்காப்பக நிர்வாகிகள், மகளிர் தொழில் முனைவோர்கள், புத்தொழில் முனைவோர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in